# <u>இலங்கையை ‘ஆக்கத்திறன்னாக்குதல்’</u>

அனோகா P. அபேரத்ன

*“ஒரு நாடாகவும் தேசமாகவும் முன்னேறுவதற்கு நாம் எமது உற்பத்திகளுக்குக் கூடிய முன்னுரிமை வழங்க வேண்டும்,” என 2016 பெப்ரவரி 5ஆம் திகதி நடைபெற்ற “புத்தாக்கங்களுக்கான ஜனாதிபதி விருது” வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் குறிப்பிட்டார். புத்தாக்கங்களை தயாரிப்பவர்களை வலுப்படுத்துவதன் மூலம் உள்நாட்டுச் சந்தையிலும் புத்தாக்கங்களுக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கான ஒரு விஷேட நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்த தான் விரும்புவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். இந்த நிகழ்வானது இலங்கையில் “புத்தாக்க கலாசாரத்தை” உருவாக்குவதற்கான ஒரு அடித்தளத்தை உருவாக்குவதுடன், நாட்டில் புத்தாக்கத்துக்கு உதவுதல் எனும் புதுப்பிக்கப்பட்ட அபிலாசையுடன் எவ்வாறு உள்ளூர் ஆடசி இதனை ஆரம்பிக்கின்றது என்பதனைக் காட்டுகின்றது.*

*இந்தக் கட்டுரையை UNLOCKED வலைப்பதிவாளர் அனோகா அபேரத்ன அவர்களால் ‘புத்தாக்கத்துக்கான’ சர்வதேச மற்றும் தேசிய நிலைப்பாடு பற்றிய தனது கருத்தை வழங்குகிறார்.*

பொதுவாக ஜப்பான், சுவீடன், பின்லாந்து, தென்கொரியா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளைவிட இலங்கையில் இல்லாதது என்ன?

Bloomberg புத்தாக்க குறிகாட்டிகளுக்கமையை, இந்த ஐந்து நாடுகளும் புத்தாக்க ஆய்வு மற்றும் அபிவிருத்தியில் முதல் 5 நாடுகளாக உள்ளதை நான் அண்மையில் கண்டேன். இவர்கள் தமது ஆக்கத்திறனைப் பிரயோகித்து சிறந்த தொழில்நுட்ப ஆக்கங்களை உருவாக்கியுள்ளனர்.

அதேபோல தென் கொரியா, பின்லாந்து மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் இரண்டாம்நிலை கல்விக்குப் பின்னரான கற்றைக்குரிய சிறந்த 5 நாடுகள் பட்டியலிலும் இடம் பிடித்துள்ளன (அதன் தொழில்படைக்கமைய).

இந்த தகவல்களுக்கான காரணிகளுடனான வியக்கத்தக்க விடயம் யாதெனில், முக்கிய விடயமான “புத்தாக்கம் மற்றும் ஆக்கத்திறன் இலங்கைப் பாடசாலைகளில் ஊக்குவிக்கப்படாமை நாட்டின் சாதகமான அபிவிருத்தி மற்றும் அதன் மக்கள் மீதும் தாக்கம் செலுத்துகின்றது. அநேகமான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மையை சமூகச் சவால்களுக்கான ஒரு தீர்வாகக் காண்கின்றது. ஏனெனில், இவற்றின் மூலம் உருவாக்கப்படும் கருத்தாக்கங்கள் மிகவும் வினைத்திறன்மிக்க தீர்வுகளாகவே உள்ளன.

அவ்வாறான ஒரு தீர்வாக சமூக தொழில்முயற்சியாண்மையைக் குறிப்பிடலாம். இந்த வசனப் பிரயோகம் பழக்கப்பட்டிருந்தாலும், இலங்கையில் இதற்கானதொரு வரைவிலக்கணமோ அல்லது இதனை ஒழுங்குபடுத்துவற்கான கொள்கை வரைவுகளோ இல்லை. இது எளிமையானதொரு விடயமாக இருக்கலாம். ஆனால் சிறார்களை ஆக்கத்திறன்மிக்க வழியில் அறிவூட்டல் எனும் உறுதியான எண்ணக்கருவைக் கொண்டுள்ளது. EducateLanka அமைப்பு ஒரு சிறந்த உதாரணமாகும். மற்றைய உதாரணம் Good Market ஆகும். இது நுகர்வாளர்களுக்கு ஆரோக்கியமான சேவையை வழங்கும் அதேவேளை சிறந்த சந்தை முறைமையின் கீழ் மக்கள் அடைவை உறுதிசெய்துள்ளது. 2014 தேசிய மானிட அபிவிருத்தி அறிக்கையின்படி, தேசிய மானிட வளங்கள் மற்றும் தொழில் கொள்கையானது முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கௌரவமான வேலைத்தரத்தை உறுதிசெய்யும் அமைப்புக்களுக்கான கடன் மற்றும் வர்த்தக அபிவிருத்தி சேவைகளை முன்மொழிகின்றது.

பட்டப்பின்படிப்பு ஆய்வு நடவடிக்கைகளின்போது அதேபோல பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இந்த சமூக தொழில்முயற்சியாண்மை பற்றி விளக்க முயற்சித்தவேளை அநேகமானவர்களுக்கு இதனை விளங்கிக்கொள்வது மிகவும் கடினமானதொன்று என்றே நான் உணர்ந்தேன். ஏனெனில் “சமூகமுயற்சியாண்மை” என்பது இலங்கை மக்களின் நாளாந்த வாழ்வுடன் தொடர்புபட்ட ஒரு விடயமல்ல.

வெறுமனே தலைப்பை மாத்திரம் கதைத்துவிட்டுச் செல்லாது எவ்வாறு இந்த சமூக முயற்சியாண்மை செயற்படுகின்றது. அதன் தாக்கங்கள் என்ன என மக்களுக்கு ஆக்கபூர்வமான வழியில் காண்பிக்கும் வரை இந்நிலை தொடரும். ஒரு சுயதொழில் முயற்சி தொழில்முயற்சியாண்மை வரை எவ்வாறு விரிவாக்கமடைகிறது. தொழில்முயற்சியாண்மை அடிப்படைத் தத்துவங்களை கல்வி முறைமையின் ஊடாக அறிமுகம் செய்து, குறைந்த செலவிலான நிதியைப் பெறல் மற்றும் வியாபார பங்காளர்களுடனான இணைப்பை ஏற்படுத்தல் எனும் விடயங்கள் NHDR (2014) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக பொருளாதார அமைப்பின் உலக வடிவமைப்பாளர்கள் மற்றும் அதன் சமூகத்தில் ஒரு புதிய சாதனையாளராக இருப்பதைவிட்டு புத்தாக்க அளவு, திட்டங்கள் மற்றும் ஆக்கத்திறன்கள் என்பன அதிர்சிக்குரியதாகவும் துக்ககரமானதாகவும் உள்ளன. நாட்டின் சிறந்த சிந்தனையாளர்கள் ஆக்கத்திறன்மிக்கவர்களாக இருக்க மறந்துள்ள அதேவேளை நன்கு பாதிக்கப்பட்ட் மாற்று வழிகளில் அவை அடையப்படுவதை உங்களால் உணர முடியும்.

சன்ட்ரா வந்துரன்கல எனும் வியக்கத்தக்க பெண் ஒருவரின் நேர்காணலை நான் அண்மையில் வாசித்தேன். அதில் அவர் சில விடயங்களில் அரசியல்ரீதியாக ஊக்குவிக்கப்பட்டதாகவும் அவரால் தொழில்முயற்சியாண்மையாளராகவும் வடிவமைப்பாளராகவும் பாரிய மாற்றங்களை செய்ய முடியும் என்பதை உணர்ந்துள்ளார். நாட்டின் இளையோர்கள் இதுபோன்ற நபர்களையும், சாதனையாளர்களையும் பின்தொடர்வது மிகவும் இன்றியமையாததாகும்.

இறுதியா, இவை வெற்றுப் பேச்சுக்களாக இருக்கக்கூடாது. அரசியலால் தூண்டப்பட்ட தனிநபர்கள் அல்லது குழுக்களின் வலைத்தள அல்லது தனிநபர் பிரச்சாரங்களாக நாடு முழுவதும் முன்னெடுக்கப்படுவது இலங்கையின் அபிவிருத்தி நிலைத்திருப்புக்கும் புத்தாக்கத்துக்கும் சரியான முறையில் உதவும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் செயற்திட்டங்களற்ற விடயங்கள் மாற்றங்களைத் தோற்றுவிக்காது. மக்கள் சமூக, பொருளாதாரரீதியாவும், கல்விரீதியாகவும் தாமாகவே வலுப்பெற்று மற்றையவர் வாழ்விலும் மாற்றத்தை உருவாக்கும் வழியைக் கண்டுபிடிக்கின்றனர். ஆக்கத்திறன், புத்தாக்க சிந்தனை மற்றும் செயற்திட்டங்களினூடாக அவர்களால் மாற்றங்களை செய்ய முடியும் என்பதனை அவர்கள் உணர்கின்றனர். மேலும் இந்த வழியிலான சாத்தியப்பாடுமிக்க அபிவிருத்தி யதார்த்தபூர்வமாகவே ஆரம்பிக்கும்.

*(UNLOCKED உலக அபிவிருத்தியில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தும் இலக்குடன் இலங்கை இளையோருக்கு அவர்களது நோக்குகள் மற்றும் கருத்துக்களை முன்வைக்கும் ஒர களமாகும். இந்த வலைத்தளத்தில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் குறித்த எழுத்தாளரினதாகும். இலங்கை UNDP மற்றும் Daily FT என்பன இந்த வலைத்தளத்தில் முன்வைக்கப்படுகின்ற கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவோ அல்லது உறுதியுரை வழங்கவோ மாட்டாது. UNLOCKED முன்னெடுப்புக்கள் பற்றி மேலும் வாசிக்க www.lk.undp.org)*